ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka

අති විශෙෂ அதிவிசேஷமானது EXTRAORDINARY

අංක 896/2 – 1995 නොවැම්බර් 07 වැනි අඟහරුවාදා – 1995.11.07
896/2 ஆம் இலக்கம் – 1995 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
No. 896/2 – TUESDAY, NOVEMBER 07, 1995

## 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 47 (1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 18 ஆம் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டம்.

செயலாளர்,
பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு.

கொழும்பு,
1995, நவெம்பர் 03.

## கட்டளைச்சட்டம்

1. இக்கட்டளைச் சட்டம், 1995 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, "வளாகச் சபைக் கட்டளைச்சட்டம்" என எடுத்துக்காட்டப் படலாமென்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படுவதன் மேல் வலுவுக்கு வருதலும் வேண்டும்.

2. (1) இதனகத்துப் பின்னர், "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும் வளாகச் சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) வளாகத்தின் தலைவர் ;

(ஆ) வளாகத்தின் துறை ஒவ்வொன்றினதும் பீடாதிபதி ;

(இ) வளாகப் படிப்பின் ஒவ்வொரு பகுதியினதும் தலைவர்கள் ;

(ஈ) வளாகம் எந்தப் பல்கலைக்கழகத்துடன் இணைந்ததோ அந்தப் பல்கலைக்கழகத்தின் செனற் உறுப்பினர்களிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இரு உறுப்பினர்கள் ; அத்துடன்

(உ) வளாகத்தில் போதிக்கப்படும் பல்வேறு கற்கைத் துறைகளில் மதிப்பார்ந்த சேவையை அளித்தவர்களான ஆட்களிடையேயிருந்து, எந்தப் பல்கலைக்கழகத்துடன் வளாகம் இணைந்துள்ளதோ அந்தப் பல்கலைக்கழகத்துப் பேரவையினால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்.

(2) இரண்டாம் பந்தியின் உட்பந்தி (ஈ) என்பதன் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் உறுப்பினர் ஒருவர் அல்லது 2 ஆம் பந்தியின் (உ) என்னும் உட்பந்தியின் கீழ், நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், முன்னதாகவே அவரது பதவிகளை வறிதாக்கினாலன்றி, அவர் விடயத்துக்கேற்றாற்போன்று நியமிக்கப்பட்ட அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன், விடயத்துக்கேற்றாற்போன்று அவர் மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும் ;

ஆயின், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் எதன் பயனைக் கொண்டு, சபையின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியுடையவரானாரோ, அதன் பயனைக் கொண்டு பல்கலைக்கழகத்தின் செனற் சபை உறுப்பினராக உள்ள வரையிலும் பதவியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) நியமிக்கப்பட்ட, அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் எவரும், அவரது காலம் முடிவடையுமுன்பு அவரது பதவியை வறிதாக்கினால், அவரது அடுத்தமைவோர், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலன்றி, அவரது முன்னமைந்தோரின் பதவிக் காலத்தின் முடிவுறாதுள்ள பதவிக் காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(4) சபையின் நியமிக்கப்பட்ட அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் எவரும், அத்தகைய வளாகம் எந்தப் பல்கலைக்கழகத்துடன் இணைந்ததோ அந்தப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்கு முகவரியிடப்பட்டவொரு கடிதத்தின் வாயிலாக அவரது பதவியைத் துறக்கலாம்.

(5) சபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண், அதன் மொத்த உறுப்பாண்மையின் மூன்றிலொன்று ஆதல் வேண்டும்.

(6) வளாகத்தின் தலைவர், வளாகச் சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல் வேண்டும். தலைவர் கூட்டமொன்றுக்குத் தலைமை தாங்க இயலாவிடின் உறுப்பினர்கள், சமுகமாயிருந்த உறுப்பினரிடையேயிருந்து, உறுப்பினரொருவரை அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்குவதற்கெனத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

3. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டு செத்தெம்பர் 28 ஆம் தேதிய 55/26 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க "வளாகச் சபைக் கட்டளைச் சட்டம்" இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றது.